©
GOVERNMENT OF TAMIL NADU
2010

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

## EXTRAORDINARY PUBLISHED BY AUTHORITY

No. 87] CHENNAI, THURSDAY, MARCH 25, 2010
Panguni 11, Thiruvalluvar Aandu–2041

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### COLLECTORS AND LOCAL AUTHORITIES

**மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளர், திருச்சிராப்பள்ளி.**

**திருச்சிராப்பள்ளி மாவட்டம், தொட்டியம் ஊராட்சி ஒன்றியம், அரசலூர் ஊராட்சி மன்றத் தலைவரை பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*(ந.க. அ9/4752/2008.)*

**No. VI(2)/116(a)/2010.**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், தொட்டியம் ஊராட்சி ஒன்றியம், அரசலூர் ஊராட்சியின் ஊராட்சி மன்றத்தலைவர் 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், அத்தியாயம் 5 சட்டப்பிரிவு 84 உட்பிரிவு (c)–ன் படி ஊராட்சி கணக்குகளை முறையாக பராமரிக்காததாலும், அத்தியாயம் 3 சட்டப்பிரிவு 46–ன்படி ஊராட்சி மன்றத் தலைவருக்குள்ள கடமைகளை செய்யத்தவறியதாலும், அரசாணை நிலை எண் 92 ஊரக வளர்ச்சி (சி3) துறை நாள்: 26–03–1997–ஐ மீறி செலவினச்சீட்டு மற்றும் துணை செலவினச்சீட்டு இல்லாமல் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளமைக்காகவும், அரசாணை நிலை எண் 167 ஊரக வளர்ச்சி (சி4) துறை நாள்: 09–08–1999–ஐ மீறி முறையாக ஊராட்சி மன்ற கூட்டம் நடத்தப்பெறாமல் உள்ளதற்காகவும், அரசாணை நிலை எண் 286 ஊரக வளர்ச்சித் துறை நாள்: 31–12–1998–ஐ மீறி ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளை பின்பற்றிடாமல் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமைக்காகவும் மற்றும் அரசாணை நிலை எண் 233 ஊரக வளர்ச்சி துறை நாள்: 26–03–1998, அரசாணை நிலை எண் 83 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி மா.தி.2. துறை நாள்: 29–06–2006 ஆகிய விதிமுறைகளை மீறி தெருவிளக்கு மற்றும் கைப்பம்பு பராமரிப்பிற்கு கூடுதலாக செலவினம் மேற்கொண்டமைக்காகவும் 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 205 உட்பிரிவு (11)–ல் ஊராட்சிகளின் ஆய்வாளர் என்ற முறையில் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி அரசலூர் ஊராட்சி மன்ற தலைவர் திரு. ச. செல்வராஜ் என்பவரை பதவி நீக்கம் செய்து ஆணையிடப்படுகிறது.

மேற்படி அறிவிக்கை வெளியிடப்படும் நாள் முதல் அரசலூர் ஊராட்சி மன்றத் தலைவரின் பதவி நீக்கம் உறுதி செய்யப்படுகிறது.

திருச்சிராப்பள்ளி,
2010 மார்ச் 24.

**தா. சவுண்டையா,**
*மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்*
*ஊராட்சிகளின் ஆய்வாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

DTP—VI-2 Ex. (87)